# விளம்பரம்™
VLAMBARAM™

☎: 416-282-8059 மாதமிருமுறை வெளிவரும் சமூக முன்னேற்றப் பத்திரிகை இலவசம் FREE

நதி VIII SEPTEMBER 15, 1998 பாலம் 18



## வீடு விற்பது, வாங்குவது

வாழ்வில் முக்கியமான செயல்களில் ஒன்று. எனவே இவை பற்றி பூரணமான இலவச ஆலோசனைகளைப் பெற அழையுங்கள்:

☎: 416-287-2183/491-4002

ராஜா எம். மகேந்திரன் sales rep.
RE/MAX Crossroads Rlty Inc.

நம்பிக்கை ▲ நேர்மை ▲ திறமை


## சூரியன் / சந்திரனை வழிபடுதல் முறைதானா? (பக்கம் 2)

## வீடு வாங்கும் போது அறிந்திருக்கவேண்டியவை (பக்கம் 12)

## என்றும் இளமைக்கு நாடிசுத்தி தேவை? (பக்கம் 4)

## கிரிக்கட் போட்டியில் மீண்டும் தமிழ்சாதனை (பக்கம் 8)

## 1931 இலிருந்து தமிழ்ப் படங்களின் தொகுப்பு (பக்கம் 10)

## விமான விபத்துக்கள்? (பக்கம் 13)

## கற்றாரை கற்றாரே காமுறுவர், உண்மைதானா? (பக்கம் 7)


### துரித பணமாற்றுச் சேவை

வவுனியா - கொழும்புச் சுற்றுப் புறங்களுக்கும் - சிங்கப்பூர் - சென்னை ஆகிய இடங்களுக்கு கடுகதியில் பணம் அனுப்புவதற்கு
மு. காசிப்பிள்ளை & சன்ஸ் ☎ (416) 267-8221

### EZ DRIVING SCHOOL

நவீன தன்னியக்க வாகனங்களில் சொந்த மொழியில் பயிற்சி விளக்கங்களுடன் அரச அனுமதி பெற்ற பயிற்சியாளரிடம் பயிற்சி பெற
PL. CALL: JEYAKUMAR
(416) 283-4100
Cell: 822-6741
(9 வருட கால அனுபவ பயிற்சியாளர்)

### SINGAPORE PAGING



SUMMER SPECIAL
$99 + Tax *
Includs MOTOROLA BROVO CLASSIC PAGER + 12 MONTHS AIR TIME
*ONE TIME ACTIVATION $15.00
* * * * * * * * * * * * * * * * * * * * * * * *
REGULA DEALS
Motorola Brovo Plus $39.00 Monthly $5.95
Motorola Pronto $60.00 (Annual Price)
Motorola Extra Flex $90.00
Pharmacy/Finch - Daily Needs: 490-7703
Kipling/Steeles Singapore paging 745-2378

### SNR OPTICAL

அனைத்து டிசைனர் பிறேம்ஸ் மற்றும் கண்ணாடிகள் (Designer Frames & Sunglasses) மேலும் சகல திருத்த வேலைகள் சிறந்தமுறையில் அனுபவமிக்கவரால் செய்துகொள்ள தொடர்புகொள்ளவும். • அரசாங்க உதவியில் உள்ளவர்கள், மற்றும் அனைத்து காப்புறுதிகளும் ஏற்றுக்கொள்ளப்படும்.• 60 வயதிற்கு மேற்பட்டவர்களிற்கு சில வசதிகளுமுண்டு.
ரதி FRAME CONSULTANT (Robert Optician) ☎: (416 )332 9995

### சகல ரக வீடியோக்களும் திருத்துமிடம்

TV, VIDEO, MICROWAVE OVEN, REMOTE CONTROL, AMPLIFIER நியாயமான விலையில், தரமாகத் திருத்திக் கொடுக்கப்படும். (25 வருட அனுபவம்) கிருபானந்தராஜா (LONDON QUALIFIED)
TEL: 438-9134
FREE ESTIMATE & PICKUP

### ஞானம்ஸ் ஸ்ரூடியோ

Introducing 1Hour Photo Lab: 3X5 & 8X12
Professional Photographer - கதிர்
☎: (416) 750-8118
2425 EGLINTON AV. E. UNIT 3
KENNEDY/ EGLINTON, SCARBOROUGH

### உடன் யாழ் செல்ல வேண்டுமா!!

ரொறன்ரோ → கொழும்பு → யாழ்ப்பாணம்
அத்துடன் யாழ் குடா நாட்டின் அனைத்து பகுதிகளுக்கும் பணம் கொண்டுபோய் கொடுக்கப்படும்
உடன் தொடர்பு கொள்ளவும்.
சிவா/குகா
Tel: (416) 438-1382

### ELECTRICAL REPAIRS

உங்களிடமுள்ள சகல விதமான ரெலிவிசன்கள் றேடியோக்கள் வீடியோக்களை குறைந்த செலவிலும், சிறந்த முறையிலும் குறிப்பிட்ட நேரத்திலும் திருத்திக் கொள்ளநாடுங்கள்
முருகதாஸ்-☎ 261-6883

### AIRPORT SERVICE & MOVING VAN

ஏயர்போட்டிற்கு பிரயாணிகள் போய்வருவதற்கான சேவைகளும், மற்றும் பொருட்களை இடமாற்றம் செய்வதற்கான சேவைகளிற்கு
☎: (416) 759-0557

### TUITION

அனுபவம் வாய்ந்த தரமான முதுகலை (M.A.) பட்டதாரி ஆசிரியையினால் KINDERGARDEN இலிருந்து Grade 6 வரையிலான பிள்ளைகளுக்கு Tution சொல்லிக் கொடுக்கப்படும்
PL. CALL: 755-8034


### TUITION

WESTON / LAWRENCE / JANE பகுதியில் ஒன்ராரியோ கற்பித்தற் தகமையும், அனுபவமும் வாய்ந்த ஆசிரியரால் 8ம் தரம் - OAC வரைக்கும், Math Chemistry, Physics, Science ஆகிய பாடங்கள் அனுபவங்கள் அடிப்படையான கண்டுபிடித்தல் முறைப்படி (Discovery Method) கற்பிக்கப்படும்
Chelva : (416) 614-1122

### DR. B. B. Kalra

Family Physician - (குடும்ப வைத்தியர்)
3268 Finch Ave. E., Scarborough, Ont. (One Traffic light West of Warden)
Tel: (416) 492-9880

எங்களின் சேவைகள்
- வருடாந்த மருத்துவ பரிசோதனை
- குழந்தைப் பராமரிப்புக்கள்
- கர்ப்பப் பரிசோதனைகள்
- குடும்பக்கட்டுப்பாட்டு ஆலோசனைகள்
- பாலியல் நோய்க்குரிய சிகிச்சைகள்
- நோய்த் தடுப்பு ஊசிகள், E.C.G சோதனைகள்
- Allergy தடுப்பூசிகள் அவசியமேற்படின் வீட்டில் வந்தும் நோயாளிகளைப் பார்வையிடுவார்.




OHIP உள்ளவர்களுக்கு இச்சேவை இலவசம்

### சிவாகம கிரியா பீடம்



☎: (416) 724-7480
திருமணம், பதிவுத்திருமணம், பூப்பு நீராட்டு விழா, புண்யாக வாசனம், வீடு குடி புகுதல், திருமணம் விஷேச தனபாக்கிய பூஜை கடை திறப்பு, லக்சுமி பூஜை சிரார்த்த மஹாளயாதி பிதிர் பூஜைகள் மற்றும் ஜோதிஷம் பார்த்தல், ஜனன ஜாதகம் எழுதுதல், விவாகப் பொருத்தம் பார்த்தல், மஹாகணபதி ஹோமம் ஆயுஷ்ய ஹோமம் தாரதோஷ மாங்கல்ய தோஷ நிவர்த்தி ஹோமம் மற்றும் முத்து மணவறையா? தலைஅலங்கார ஜோடனைகளா? ஜடை நாகம் ஆண்டாள் மாலைகளா? தலைப்பாகையா? பரத நாட்டிய அலங்கார ஆபரணங்களா? மற்றும் கல்யாண மண்டபமா? உங்கள் தேவைகளுக்கு அணுகுங்கள்.
சிவஸ்ரீ ச. கு. ஸ்ரீதரக்குருக்கள் (கண்ணன் குருக்கள்)
திருமணப் பதிவாளர் / நிர்வாகி சிவாகம கிரியா பீடம்
5 Greenleaf Terr. , Scarborough, Ont.

# அறிவும் ஆக்கமும் (18) - விஜே குலத்துங்கம்



முற்காலத்தில் புரியமுடியாத, அதிசயிக்க வைத்த விடயங்களை மனிதர்கள் வணங்கி வழிபட்டு வந்தார்கள். இந்த வகையில் சூரியன், சந்திரன் கூட கடவுள்களாக பல இனத்தவர்களால் வழிபடப்பட்டு வந்தது. சூரியன் தினமும் ஒரே வகையிலே தோன்றியும் மறைந்தும் வருகின்றது. ஆனால் சந்திரன் மட்டுமல்ல, பூரண சந்திரனாகவும், பின்னர் தேய்ந்து சென்று முற்றாக மறைந்து அமாவாசையாகவும், பின்னர் வளர்பிறையாக வளர்ந்து மறுபடியும் பூரண சந்திரனாகின்றது. எனவே கடிகாரம், நாட்காட்டி இல்லாத காலத்தில் ஒரு நாளின் நேரத்தை அறிய சூரியனும், நாட்கள் ஓடுவதைக் கவனிக்கவும், நாட்களைக் கணிக்கவும் சந்திரன் உபயோகமாக இருந்தது. எனவேதான் சூரியனைவிட, சந்திரன் சமய வழிபாடுகளிலும், பூரணை விரதம், அமாவாசை விரதம் என நாட்களை கணக்கிட்டு தினங்களை குறிக்க உதவியதால், சந்திரன் சமய அனுஷ்டானங்களில் முக்கிய இடம் வகித்துள்ளது.

ஆனால் விஞ்ஞான முன்னேற்றத்தினால் தற்போது சூரியன் எப்படி இருக்கின்றது, சந்திரன் எப்படி இருக்கின்றது என்பது எமக்குத் தெரியுமாகையால், சந்திரனை விட சூரியனே முக்கியதொன்றாகவும், உண்மையில் நாங்கள் வழிபடத் தேவையென்றால், சூரியனையே வழிபடுதல் சாலச் சிறந்தது. அவனின்றி அணுவும் அசையாது என்பது சூரியனுக்கே மிகவும் பொருத்தம். அணுவும் அசையாது என்பது சூரியனுக்கே மிகவும் பொருத்தம். அன்றாட வாழ்க்கைக் தேவையான எல்லா வகையான சக்திகளுக்கும் மூல காரணம் சூரியன். சூரியன் இல்லாவிடில் ஒரு உயிரினமேனும் தாவரங்கள் பயிர்கள் உட்பட வாழ இயலாது. இந்த வகையில் தைப்பொங்கல் தினத்தில் சூரியனை வழிபடும் தமிழர்கள், பகுத்தறிவு மிக்கவர்கள் என்றே கூறவேண்டும்.

சந்திரன் மலைகள், பள்ளங்கள் போன்ற கரடு முரடான மேற்பரப்பைக் கொண்ட அழகில்லாத ஒரு இடம். சூரிய ஒளி அதில் பட்டு தெறிப்பதாலேயே ஒளி வழங்குகின்றது. தூரத்தில் இருந்து பார்க்கும்போது அழகாக தோன்றினாலும் அருகில் சென்றால் சகிக்க முடியாது. இது தெரிந்திருக்கும் தற்போதும் கூட பெண்களின் முகத்தை சந்திரனுடன் ஒப்பிட்டு கவிஞர்கள் கவிபாடுகின்றார்கள். ஒரு புதுக்கவிதை படித்த பொழுது, அதில் கூறப்பட்டிருந்தது என்னவெனில், சந்திரன் சூரிய ஒளியை மேற்பரப்பில் பூசி அழகாக தெரிவதுபோல், Make-Up பூசிய பெண்களின் முகம் அழகாக தெரிகின்றது. சரி இந்த விடயத்தை கவிஞர்களிடமே விட்டுவிட்டு, சந்திரனையொத்த வேறு ஒரு விடயத்தைப் பற்றிப் பார்ப்போம்.

சந்திரன் அதிதூரத்தில் இருந்து, அதில் சூரிய ஒளிபட்டு தெறிப்பதால், பூமிக்கும் சந்திர ஒளி வருகின்றது. இதைப்போல் விண்ணில் ஒரு கண்ணாடியை செயற்கையாக வைத்தால், அதில் சூரிய ஒளிபட்டு தெறித்து, பூமிக்கு ஒளியைப் பெறலாம் அல்லவா? இந்த முறையைப் பின்பற்றி, இவ்வருடம் நொவெம்பர் 09ந் திகதி, Znamya 2-5 என்ற 25 மீற்றர் அளவுள்ள ஒரு ஒளி தெறிப்புக் கருவி (Reflector) வானத்தில் விடப்பட இருக்கின்றது. இது அடுத்த 24 மணித்தியாலத்திற்கு பூமியை 16 தடவை வலம் வரும். ரஷ்ய விண்வெளிக்கலமான Mirல் இருந்து விண்வெளி நிபுணர்கள் ஒரு Joystick மூலம் இந்த தெறிக்கப்படும் ஒளியை வடபிராந்தியத்திலுள்ள சில நகரங்களுக்கு தெறிக்கச் செய்வார்கள். ரஷ்யாவின் Arctic பிரதேசத்தில் Winter காலத்தில் மிக நீண்ட இரவுக்காலம் இருக்கும். இந்த இடங்களிலேயே ஒளியை பாய்ச்சுவார்கள். இந்த பரிசோதனையை செய்யும் Moscowற்கு அருகிலுள்ள Korolev என்ற இடத்தைச் சேர்ந்த Energia நிறுவனத்தின் நோக்கம் 2000 ஆண்டளவில் இப்படியான 200 ஒளிதெறிக்கும் கருவிகளை விண்வெளியில் இயங்கச் செய்வதாகும்.

November 9 ந்திகதி அனுப்பப்படும், Reflector சந்திரனை விட 10 மடங்கு அதிகளவில் ஒளியை வழங்கும். இந்த முயற்சி வெற்றியடைந்தால், 70 மீற்றர் விட்டமுள்ள ஒரு Reflector ஐ எதிர்காலத்தில் அனுப்பவுள்ளது. இது சந்திரனைவிட 100 மடங்கு ஒளியைத் தரும்.

முன்னர் ஒருமுறை 1993 ம் ஆண்டு பெப்ரவரியில் Znamya - 2 என்ற Reflector அனுப்பப்பட்டது. ஆனால் இது பூரண வெற்றியளிக்கவில்லை. இந்த Reflector முதலில் சிறிய அளவில் மடிக்கப்பட்டே வெளியில் விடப்படும் பின்னர் இது விரிக்கப்பட்டு தெறிக்கப்படும் பரப்பு வெளிக்கொணரப்படும். ஆனால் 1993ம் ஆண்டு இது திறக்காததால் சந்திரனை ஒத்த அளவான ஒளியே பெறப்பட்டது. அத்துடன் remeote ஆல் இயக்கப்படவும் முடியவில்லை.

ஆனால் இம்முறை அனுப்பப்படுவது வெற்றியளிக்கும் என நம்பப்படுகின்றது. இது ஒரு சுவாரசியமான முயற்சி என்றாலும் இதற்கு எதிர்ப்புகளும் உள்ள. முக்கியமாக வானியல் விஞ்ஞானிகள் (Astronomers) இரவில், இருண்ட வானத்தில் தொலைக்காட்டியினால், விண்வெளியிலுள்ள நட்சத்திரங்கள், கிரகங்கள் முதலியவற்றை அவதானித்து ஆய்வுகள் செய்பவர்கள் இந்த செயற்கை வெளிச்சங்களினால் தங்கள் ஆய்வுகள் பாதிக்கப்படும் எனக் கூறுகின்றார்கள்.

இதைவிட சுற்றாடல் பாதிப்புகளும் இருக்கலாம். தாவரங்கள் பூக்களை உண்டாக்கும் தொழிற்பாடு இரவுநேரத்தின் அளவிலேயே தங்கியுள்ளது. இரவின் நேரங்கள் மாறிக்கொண்டு செல்வதாலேயே குறிப்பிட்ட காலங்களில் குறிப்பிட்ட தாவரங்கள் பூக்கின்றன. தாவரங்களின் வளர்ச்சிக்கு சூரிய ஒளி அவசியம் என்றாலும், பூப்பதற்கு தொடர்ச்சியான இரவு நேரம் அவசியம். எனவே செயற்கை ஒளி இதைப் பாதிக்கலாம். மற்றும் செயற்கை ஒளி கூடும் போது பூமியின் மேற்பரப்பு சுற்றாடல் வெப்பநிலையும் அதிகரிக்கலாம். இதனால் பனிக்கட்டிகள் உருகி கடல்மட்டம் அதிகரிக்கலாம்.

ஆனால் இந்த முயற்சியில் ஈடுபட்டுள்ளவர்கள் Arctic பிரதேசத்தையே முதலில் ஒளிபாய்ச்ச இருக்கின்றார். விரைவில் வானில் பல சந்திரன்கள் தோன்றவிருகின்றன. நம்மவர்களின் பூரணை விரதங்களும் அதிகரிக்குமா?

************************************************************

"அறிவும் ஆக்கம்" பற்றிய உங்கள் கருத்துக்களை நீங்கள் எந்த வகையான விடயங்களை இக்கட்டுரையில் எதிர்பார்க்கின்றீர்கள் என்பதை

விஜே குலத்துங்கம் - 61 SCARFAIR PATHWAY, SCARBOROUGH, ONT. M1B 4G2 என்ற விலாசத்திற்கு அல்லது wijey@ interlog.com என்ற விலாசத்திற்கு E-Mail ஐ எழுதி அனுப்பவும்.

புதிய நிர்வாகத்தின் கீழ்

Markham / Sheppard பகுதியில்

NEW SPICELAND

☎ : 292-0086

## குறுக்கு எழுத்துப் போட்டி இல. 88

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | | | 3 | | ■ |
| | ■ | | ■ | ■ | | ■ | |
| 4 | | | | | ■ | 5 | 6 |
| | ■ | | ■ | ■ | | | 7 |
| | ■ | | 8 | ■ | ■ | | ■ |
| ■ | 9 | ■ | | ■ | 10 | | |
| | ■ | 11 | | ■ | ■ | ■ | |
| 12 | | | ■ | | | | 13 |

### இடமிருந்து - வலம்

1. அமெரிக்கா அண்மையில் பழிவாங்கு முகமாக இந்நாட்டில் எறிகணை தாக்குதல்களை நடத்தியது
4. ஒரு நட்சத்திரம்
6. தங்கு (வல - இட)
7. மனைவி (வல - இட)
8. சிங்கம் (வல - இட)
9. சோலை
10. வாய் குறுகிய உருண்டையான பாத்திரம்
11. சித்திரம் எழுது
12. பெண்
13. அறிவும் பெருந்தன்மையும் உடையோர் (வல - இட)

### மேலிருந்து கீழ்

1. பாற்கடலில் வந்த நஞ்சு
2. சரஸ்வதி
3. ஒரு செடி
5. ஒன்று சேர்
7. இளம் பெண்கள் அணியும் மேலாடை (கீழ் -மேல்)
8. தாய்
11. இனம்
12. நாலில் ஒரு பகுதி (கீழ்-மேல்)

சரியான விடைகளில் இருவர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படுவர். இவர்களுக்கு "ஸ்பைஸ் லாண்ட்" இல் பாவிக்கக்கூடிய $15. $10 Gift Certificates வழங்கப்படும். இதற்கு cash value கிடையாது. விடைகள் September 28, 98க்கு முன்னர் கிடைக்க வேண்டும். Address: P.O.Box 37527, 31 Tapscott Rd., Scarborough, Ont. M1B 5P9

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| பி | ரா | ன் | ஸ | ■ | கு | ரு | ப |
| ர | ■ | தி | ■ | தீ | ம் | ■ | ந் |
| மா | ■ | ■ | ன் | ■ | ப | ■ | த |
| த | ண் | ட | வா | ள | ம் | ■ | ய |
| ம் | ■ | ■ | ய | ■ | ■ | ■ | ம் |
| ■ | பு | ■ | தி | த | ன | ம் | ■ |
| மி | தி | ■ | த் | ■ | ■ | ட | ■ |
| து | ர் | வா | ச | ர் | ■ | வ | கு |

### #87இல் வெற்றி பெற்றோர்

1) Vasanthan s., Toronto
2) R.K. Senthilruban, Scarborough

நியூ ஸ்பைஸ் லாண்ட்

5800 ...

Unit#16 Scarborough. Ont

கிரகப் பொருத்தம் பார்த்தல்

3

4

சாதகக் குறிப்பு கணித்தல்

யோ கா சோ தி ட ம்




(416) 299-8361

ல

6

12

எண்சோதிடப்படி ஆலோசனை கூறுதல்

சுபமுகூர்த்தம் கணித்தல்


பலன் பார்த்தல்

10

9

# APPLEMORE AUTOMOTIVE

**DETAILING**
Motor shampoo
Interior shampoo
Exterior wash & waxing






Repairs
safety certification
overall maintenance
under coating &
Rust proofing


உட்புற, வெளிப்புற திருத்த, பராமரிப்பு வேலைகளுக்கு அழையுங்கள்

☎ [416] **285-4998**

முகவரி: **2500 LAWRENCE AVE. EAST, UNIT #11**
**SCARBOROUGH, ONT.** (MIDLAND & LAWRENCE)



*We are entering 7 th year service in Scarborough.*



## Better Work ...
## Less Money

**N.T.E Auto Inc.**
New Trade Engineering

We service
EUROPEAN, JAPANESE & DOMESTIC cars.
we are not just a Dealership.

**" FULLY LICENSED CLASS 'A' MECHANICS ON DUTY "**


We will reduce the worry and expense of maintaining your car by offering:

- Mechanical, Auto Electrical Repairs
- *Air Conditioning Service & Repairs*
- Mechanical Safety Inspection & Certification
- Minor & Major Repairs on European, Japanese & Domestic Cars
- Specializing in BMW
- Parts - repairs rather than replace when possible
- Free Estimates

**என். ரி. ஈ. ஓட்டோ இங்.**

**AUTO INC.**
New Trade Engineering

151 NANTUCKET BLVD, UNIT: 12
SCARBOROUGH, ONT.
☎(416) 750 - 1573
SIVABALAN






**Pillayar Traders**

**SRILANKAN . EAST & WEST INDIAN**
GROCERIES & TEXTTILES
**3630 LAWRENCE AV. E., SCARBORO**
☎ : **438-7746**


**விஷேச போட்டி இல. 77**

1. இராகங்களின் பெயர்களைக் கொண்ட பெண்பாலார் பெயர்களில் 6ஐ தருக.
2. பறவைகளின் பெயர்களில் 7ஐ தருக

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| கௌ | ரி | ம | னோ | க | ரி | ச | ம |
| னி | க | யி | ழு | தே | னு | கா | ர |
| ச | க | ல் | யா | ணி | ப | னா | க் |
| ஞ் | னா | யி | னி | கி | ரு | பு | கோ |
| ர | மை | கு | தி | தை | ந் | ஆ | த் |
| ச | ர | ஸ் | வ | தி | து | றா | தி |
| கு | க் | கோ | ரே | தா | ந் | ச | வ |
| யா | ரி | பி | ப் | க | மு | ண் | ச |

மேற்காட்டப்பட்ட சதுரப்பெட்டிகளில் பல சொற்கள் தலை கீழாக, சீராக, இடம் வலமாக, குறுக்குப்பாடாக (diagonal). நாலு மூலை வழியாகவும் அமைந்துள்ளது. இவற்றை இனம் கண்டு பினவருவனவற்றிற்குரிய விடைகளைOctober11, 98 ற்கு முன்னர் விளம்பர விலாசத்திற்கு அனுப்பி வைக்கவும்.

**# 76ன் விடைகள்**

1. நேபாளம், பங்களாதேஷ், பாகிஸ்தான், மாலைதீவு,- சீனா, மலேசியா, சிங்கப்பூர்

பரிசு பெற்றோர்:

1) M. Nirmala, Toronto
2) R. சர்மிலா, NorthYork

**பரிசுகள்:** பிள்ளையார் ரேடர்ஸ் இல் பாவிக்கக் கூடிய இரண்டு($15, $10) பெறுமதியான vouchers (இவற்றிற்கு cash value கிடையாது)

**விதிகள்:** ஒருவர் எத்தனை முறையும் முயற்சிக்கலாம்.பிள்ளையார் ரேடர்ஸ்,விளம்பரம் ஊழியர்கள் பங்குபற்ற முடியாது. விளம்பரம் குழுவின் முடிவே இறுதியானது.

# அருள் விருந்து

(சென்றஇதழ் தொடர்ச்சி)

*-செ. சிவசுப்பிரமணியம்*

53. பணம் சம்பாதிப்பது வாழ்வின் குறிக்கோள் ஆகாது. அது உணவையும் மட்டும் தரவல்லது; மனிதன் அடைய வேண்டிய பெருநிலை வேறு உண்டு.
54,. சுயநலம் என்னும் பிசாசு மனதை விட்டு ஒரு புறம் வெளியேற, மற்றொரு புறம் தெய்வீகம் மனிதனுள் வருகிறது.
55. என்னளவில் நான் அற்பனாயிருக்கலாம்.; ஆனால் என் வாயிலாக உண்மை வெளியாகும் பெழுது என்னையாரும் வெல்ல முடியாது.
56. உன்னைப் பற்றி விளம்பரம் பண்ணாதே, உலகுக்குத் தொண்டுபுரி.
57. வீண்பேச்சு வேண்டாம், பயன்படுவதைப் பேசு, அல்லது பேசாதிரு.
58. பிறர் பொருளை விரும்பாதே பிறரைப்பற்றி பொறமைப்படாதே பிறர் ஆக்கத்தைக் கண்டு மகிழ்வடை
59. சான்றோரைச் சான்றோரே அறிவர்.
60. கடவுள் ஒருவர்; அங்ஙனம் மானுட வர்க்கமும் ஒன்று. மன்னுயிர்க்குப் பணிவிடை செய்பவனது உள்ளம் இறைவனது ஆலயம்.
61. உயிர்கள் அனைத்தும் இறைவனுடைய சொரூபம் என்பதை உணர்க.
62. விலைகொடுத்து வாங்க முடியாதது, யாசகமாக ஏற்கமுடியாதது, கடன் வாங்க முடியாதது, திருட முடியாதது, எடுத்து வழங்காவிட்டால் பயன்படாது போய்விடுவது எது - முகமலர்ச்சி.
63. அழுது கொண்டிருப்பவன் எதையும் அடைய முடியாது. ஆற்றல் படைத்திருப்பவன் எதையும் அடைய முடியும்.
64. தன்னிடத்துள்ள தெய்வத் தன்மையில் நம்பிக்கை வைக்காதவன் நாஸ்திகன்.
65. முப்பத்து முக்கோடி தேவர்களின் மீது நம்பிக்கை வைத்திருந்தும் உன்மீது நம்பிக்கை வைத்திருக்காவிட்டால் நீ ஒன்றுக்கும் உதவாதவன் ஆய்விடுவாய்; நீ விமோசனமும் அடைய முடியாது.




குடும்ப பல்வைத்தியர்
**Family Dentist**
**Dr. Mahin Pouyan**

உங்கள் முழுக் குடும்பத்திற்கும் பல் சம்பந்தமான சிகிச்சைகளிற்கு 18 வருட காலம் அனுபவமும், City of NorthYork Public Schools Board of Education ஆல் தெரிவு செய்யப்பட்ட பல் வைத்தியர் **Dr. Mahin Pouyan** ஐ நாடுங்கள்

☎: (416) **225-5522**

* ஞாயிற்றுக் கிழமைகளிலும் சிகிச்சை [illegible]

**263 Finch Ave. E.** (Finch & Bayview), **North York, Ont. M2N 4S1**



# ஆரோக்கிய வாழ்வு (18) - *N.* செல்வசோதி

## என்றும் இளமையும் நாடிசுத்தியும்

யோக சாத்திரத்தில் உடலை வளைத்து வருத்திச் செய்யும் ஆசனங்களுக்கு எவ்வளவு முக்கியம் இருக்கின்றதோ அவ்வளவு அற்புத சக்தியை உடலுக்கும் உள்ளத்திற்கும் பெற்றுத் தரக்கூடிய சக்தி நாடிசுத்தியென்னும் பிரானயாமத்திற்கு உண்டென்று கூறப்பட்டுள்ளது. அத்துடன் சுவாமி விவேகானந்தரின் இராஜயோகத்திலும் பிராணாயாமத்தின் (நாடிசுத்தி) முக்கியத்துவம் நன்கு விபரிக்கப்பட்டுள்ளது. எனவே ஒவ்வொருவரும் சில எளிய நாடிசுத்தி முறைகளை அறிந்து சில பயிற்சி முறைகளைத் தினம் பின்பற்றுவதால் சகலவிதமான நோய்களிலுமிருந்து விடுபடுவதுடன் ஆயுளை அதிகரிக்கச் செய்து என்றும் இளமைப் பொலிவோடு வாழ வழி செய்யமுடியும்.

<u>நாடிசுத்தி (மூச்சுப் பயிற்சி) செய்வதற்கு பொருத்தமான ஆசனம்</u>

தரையில் அமர்ந்து சாதாரணமாக சம்மனம் போட்டு உட்கார்வது அல்லது ஒரு காலை மட்டும் மறு தொடையில் போட்டு உட்கார்வது அல்லது பத்மாசனம், வஜ்ராசனம் போட்டு இருப்பது மிகவும் சிறப்பு. ஏனெனில் முள்ளந்தண்டு நேராக இருக்கும். இப்படி நேராக நிமிர்ந்து இருப்பது தான் நாடிசுத்தியின் பூரண பலனைப் பெறும்முறையாகும்.

<u>மூச்சுப் பயிற்சி - II</u> <u>மூச்சை உள்ளே இழுக்கும் முறை</u> இரண்டு நாசித்துவாரங்களின் வழியாக காற்றை நன்றாக உள்ளே இழுக்க வேண்டும். மூச்சை உள்ளே இழுக்கும் போது வேகமாகவும் சத்தம் வரும்படியும் நீளமாகக் காற்றை உள்ளே இழுக்கவும்.

<u>மூச்சை வெளியே விடும்முறை</u> மூச்சை வெளியே விடும்போது சத்தமில்லாது மெதுவாக வெளியே விடவேண்டும்.

<u>செய்யவேண்டிய கால அளவு</u> ஒருமுறை மூச்சை இழுத்து வெளிவிடுவதை ஒன்று என்று எண்ணவேண்டும் 5 அல்லது 10 தடவைகள் மூச்சுப்பயிற்சி செய்ய வேண்டும்.

<u>மூச்சுப் பயிற்சி 2</u> <u>செய்முறை</u>

1. வலது கை மோதிரவிரலால் இடது நாசியை அடைத்துக் கொள்ள வேண்டும். 2. பின் வலது நாசி வழியாக மூச்சை நன்றாக உள்ளே இழுக்க வேண்டும்.
3. பின் அதே வலது நாசி வழியாக மூச்சை வெளியே விடவேண்டும். மூச்சை உள்ளே அடக்கக்கூடாது. மூச்சை உள்ளே இழுக்கும் போது நீளமாகவும் சத்தம் வரும்படியும் செய்யவும். வெளிவிடும் போது சத்தமின்றியும் மெதுவாகவும் இருக்க வேண்டும். கால அளவு 5 முதல் 10 தடவைகள்

<u>பலன்கள்</u> உடலில் மொத்தம் 72,000 நாடிகள் இருப்பதாகச் சித்தர்கள் கூறுகின்றனர். அதில் இடகலை அதாவது இடதுநாசி வழியாக மூச்சை உள்ளே இழுப்பது. பிற்கலை அதாவது வலது நாசி வழியாக மூச்சை உள்ளே இழுப்பது.

1. வலப் பக்க நாசி, சூரிய நாடி வழியாக மூச்சு இழுத்து விடுவதால் உடலுக்கு உஷ்ண சக்தி கிடைக்கும். அதாவது குளிர் காலத்தில் வலது நாசி வழியாக சுவாசம் செய்வதால் உடலுக்கு நல்ல வெப்பம் கிடைக்கும் குளிர் தாக்காது.
2. மனிதனின் இடதுபக்க மூளை உடலின் வலது பாகத்தைக் கட்டுப்படுத்துகிறது. எனவே உடலின் இடது பக்கத்தின் எந்த ஒரு பாகத்திலும் வலி ஏற்பட்டாலும் இடதுபக்க ஒன்றைத் தலைவலி ஏற்படுகிறது. இதற்குமூச்சுப் பயிற்சியால்தான் நல்ல பலனைப் பெறலாம்.
3. உடல் சம்மந்தப்பட்ட வேலைகள் (Physical Work) செய்யும் போது வலது நாசியில் எந்த அடைப்பும் இருக்கக் கூடாது. நன்றாக சுவாசம் நடைபெறவேண்டும். அப்போதுதான் உடல் களைப்படையாது வேலையைச் செய்ய முடியும்.
4. சாப்பிட்ட உணவு நன்றாக சமிப்பதற்கு உஷ்ணசக்தி மிகவும் அவசியம் சாப்பிடும் போது வலது பக்க நாசி வழியாக சுவாசத் தடையின்றி நடைபெறவேண்டும். அப்போது தான் உணவு நன்கு சமிபாட்டையும் இதற்கு வலது பக்க நாசிவழியாக உஷ்ணசக்தி உட்செல்வதே காரணம்.
5. முக்கியமான காரியங்கள், நேர்முகப்பரீட்சைகள் போன்றவை நடைபெறும்போது சூரிய நாடி அதாவது வலது நாசி வழியாக சுவாசம் நடைபெற்றால் வெற்றி நிச்சயம்.

<u>நாடிசுத்தி - 3</u> செய்முறை

1. வலதுபக்க கட்டை விரலால் வலது நாசித்துவாரத்தை அடைத்துக் கொள்ளவேண்டும்.
2. பின் இடது நாசி வழியாக நன்றாக மூச்சை உள்ளே இழுக்க வேண்டும்.
3. பின் அதே இடது நாசி வழியாக இழுத்த காற்றை மெதுவாகவும் சத்தமின்றியும் வெளியே விட வேண்டும். கால அளவு (5 முதல் 10 தடவைகள்)

<u>பலன்கள்</u> (1) இடது பக்க நாசி சந்திர நாடி வழியாக காற்றை இழுத்து விடுவதால் உடலுக்கு இதமான குளிர்ச்சி கிடைக்கிறது. உடலில் உஷ்ணம் அதிகமிருந்தால் இடதுபக்க நாடி வழியாக சுவாசத்தை நடைபெறச் செய்து உஷ்ணத்தைக் குறைக்கலாம்.

2. மூளை சம்மந்தப்பட்ட வேலை செய்யும் போதும் (Mental Work) மாணவர்கள் குறிப்பிட்டதை மனப்பாடம் செய்யும் போதும் இடது பக்க நாசி வழியாக சுவாசம் நடைபெறவேண்டும் அப்போது தான் மூளைக்கு நல்ல ஆறுதல் கிடைக்கும். நாடி சுத்தியின் பலன்களை வார்த்தைகளால் சொல்ல இயலாது தினமும் பயிற்சி செய்துவந்தால் அனுபவரீதியாக உணரலாம்.நாடிசுத்தி என்னும் பிராணாயாமம் பற்றிய விரிவான பயிற்சி முறைகளையும் இதன் உதவி கொண்டு நோய்களை விரட்டி ஆயுளை அதிகரிக்கச் செய்யும் முறைகளையும் அடுத்து வரும் அத்தியாயங்களில் பார்ப்போம். நன்றி: Indian Institute of Yoga


Neelam SILK

வட அமெரிக்காவில் உயர்ந்தரகப் பட்டுப் புடவைத் தெரிவிற்கு ஓர் சிறந்த புடவை மாளிகை

நீலம் சில்க்

அனைத்து மக்களின் அன்பான நல்லாதரவுடன் 6வது ஆண்டில் வெற்றிப் பாதம்பதிக்கும்

<u>நீலம் சில்க்கின் 1998ம் ஆண்டிற்கான</u>

<u>புதிய வருகைகள்</u>

- கிரிஜாவின் சௌந்தர்யா ரை அன் டை (Tie & Die) சாறி
- கிரிஜாவின் சிம்போனி கிறேப் சில்க் சாறிகள்
- கிரிஜாவின் பிரதீபா 2 கலர் தாவணி ரிசு சேலைகள்
- கிரிஜாவின் சுவாயம்வர் ரிசு (Custom Made Special Jari)
- மினி அபூர்வா சேலைகள்



கோலஷ், ரங்கோலி, அபூர்வா, காஞ்சியின் புதிய டிசைன்கள். இவை மட்டுமல்ல இன்னும் பலவித தெரிவுகள் "நீலம் சில்க்"

"தமிழர் மத்தியில் ஓர் தரமான பட்டுப்புடவை மாளிகை"

1453 GERRARD STREET EAST
(Indian Bazzar)




<u>யோகாசன வகுப்புக்கள்</u>

அனுபவமிக்க ஆசிரியரால் பிரதி ஞாயிறு தோறும் காலை MARKHAM / ELLESMERE இற்கு அருகாமையில் அமைந்திருக்கும் வோபன் கொலிஜியேற்றில் (Woburn Collegiate) நடாத்தப்படுகின்றது.

மேலதிக தொடர்புகளுக்கு சத்தி : 291-5853




YARLCAN
STEAM CLEANING



Tel: (416) 724-9085 / Pager : 600 0335/ Cell. 721-9709

# நிம்மதி ஒரு நிதி



-ஜோதிட விஞ்ஞானி, வைத்திய கலாநிதி, பேராசிரியர் C.S.S. சோமசுந்தரம்

**(சென்ற இதழ் தொடர்ச்சி)**

எனக்கு ஒரு நண்பர், மிக திறமைசாலி, படிப்பாளி, உழைப்பாளி, தன் முயற்சியால் அளவுக்கு மிஞ்சிய செல்வத்தை சேர்த்தார், பத்து குடும்பத்திற்கு போதிய செல்வத்தை பேராசையால் சேர்த்தார். என்னிடம் அடிக்கடி தன் ஜாதகத்தைக் காட்டுவார். ரொம்ப நல்ல யோகமான ஜாதகம் தான் ஆனால் 8ல் நின்ற செவ்வாய் திசை 5 வது திசையாக மாரக திசையாக வரும் போது அத்தனை செல்வத்தையும் இழக்க நேரிடும் என்றேன். **" கேடுவரும் பின்னே மதி கெட்டுவரும் முன்பே"** என்பர். சில சிறுகவலைகளை மறக்க மது அருந்தி பின் பணத்தை பத்து மடங்காக்க சூது விளையாட்டில் ஈடுபட்டு பின் பெண்களுக்கும் தாராளமாய் செலவிட்டு கோடிக்கணக்கான செல்வத்தை 5 வருடத்திற்குள் தொலைத்து வங்கிகள் கொடுத்த கடனுக்கு அவர் வீட்டையும் ஜப்தி செய்ய மனநோயாளியாகி பைத்தியம் பிடித்தவர்போல் ஊண், உறக்கமின்றி, இருதய பாதிப்பால் வெகுபரிதாபமாக இறந்தார். அவர் நிலையை இன்று நினைத்தாலும் அதாவது 100 வயது வாழ வேண்டியவர் 43 வயதில் இறந்ததை நினைக்க மிக துயரமாய் இருக்கிறது. மனநிம்மதி இழந்தால் மனிதர் 6 மாதமே போதும் அவன் இறக்க. பாரசீக நாட்டு "சா" மன்னன் பதவி இழந்து பராரியாய், பஞ்சையாய், பரதேசியாய் நாதியற்று 1979 ஆண்டு உலக நாடெல்லாம் ஒதுக்க புகலிடம் தேடி அலைந்து 6 மாதத்தில் இறந்த [illegible]தை உலகறியும். இவை யாவும் உண்மை சம்பவங்கள். நீங்கள் அறிவீர்கள். இதையெல்லாம் அறிந்தும் பயன் என்ன? மனிதர்கள் இன்னும் எந்தவித மாற்றமும் [illegible]யாமல் மற்றவர்கள் அனுபவத்தை ஒருபாடமாக எடுத்து வாழ்கிறார்கள் இல்லையே?

இன்னுமொரு நண்பர் வங்கி மனேஜராய் நிம்மதியாய், ஒரு மனைவியுடனும் சிலைபோல 4 குழந்தைகளுடனும், சொந்த வீடு, வாகனம், கைநிறைந்த மாதவருமானம் யாவும் பெற்று சிறந்த மனேஜர் என்ற பரிசும் பெற்று வாழ்ந்தார். அந்த காலகட்டத்தில் கடன் கேட்டு வந்த ஒரு மங்கை நல்லாளுக்கு கேட்ட பணமும் கடனாக கொடுத்து அந்த கட்டுக் குலையாத பட்டு தளிர் மேனியாளின் அழகில் மயங்கி தன்னையும் அவளுக்கு தாரைவார்த்துக் கொடுத்தார். 7 வருடத்தில் இரண்டாவது குடும்பத்திற்கு 3 பிள்ளைகள் பிறந்தது. தன் சம்பளம் போதவில்லை இரண்டு வீட்டையும் நடத்த. வட்டிக்கு நண்பர்களிடம் கடன் எடுத்தார். வங்கியிலும் பணம் கடன் எடுத்து கட்ட முடியாது திணறி மன அமைதியற்று கடும் நோயாளியாகி, வேலை நீக்கம் பெற்று சிறிது காலத்தில் கவலையால் இறந்தார். இப்படியாக நான் நேரில் கண்ட அனுபவங்கள் மட்டும் 500 பேரின் கதையை எழுதலாம். வேண்டியதில்லை எல்லாம் ஒரே கதைதான். ஆசை, ஆசை, துன்பம், துயரம், சஞ்சலம், நோய், வேதனை துடிப்பு மரணம் இதுதான் கதையின் தொடக்கமும் முடிவும். ஆகவே " மனித வாழ்விலே துயரம் யாவுமே மனதினால் வந்த நோயன்றி வேறு ஒன்றும் சொல்ல முடியுமா?" இதற்கு ஒரு பழமொழியுண்டு **"ஈர உழவும் இரண்டெழுத்தில் வேளாண்மையும் தாரமிரண்டும் தனக்குப் பகை"** என்று சொல்வார்கள்.

**"அழுக்கா றவாவெகுளி இன்னாச்சொல் நான்கும் இழுகா இயன்ற தறம்"** என்றார் வள்ளுவர். மனிதன் மற்றவனை பார்த்து பொறாண்மைப்படுகிறான் பின்பு பேராசைப்படுகிறான் முயற்சி தோல்வியுற்றதும் கோபமடைகிறான் பின் கெட்ட வார்த்தைகளால் அனைவரையும் வைகிறான். இப்படியே நிம்மதியிழந்து துடிக்கிறான். மற்றவனைபோல் வாழபோய் நீ உன் வாழ்வையும் இழந்து விடுவாய். நீ நீயாகவே வாழ், தெய்வம் மிகவும் கண்டிப்பானது. மிகவும் அதாவது தாயை விட நூறுமடங்கு இரக்கமுடையது, மன்னிக்கத் தக்கது. மீண்டும் மீண்டும் பிழையான வழியில் போய் மற்றவர்களுக்கும் துன்பத்தைக் கொடுப்பாய். ஆனால் ஆண்டவன் உங்களை பெரும் துன்பத்தில் அழுந்திவாழ சபித்து விடுவான். மறக்காதீர்கள். இதுவே நாம் அறிந்த உண்மை. பூஞ்சோலையாகிய உங்கள் இதயத்தை நிம்மதியை இழந்து சுடுகாடாக்கி நோயாளியாகாது இயன்றளவு மகிழ்சியாய் அமைதியாய் ஆண்டவன் அருள் பெற்று நாமும் நலமாய் வாழ்ந்து மற்றவர்களையும் வீட்டையும் நாட்டையும் உலகத்தையும் அமைதியாய் வாழ வைக்கவே இறைவன் நமக்கு இந்த உயிரையும் உடலையும் அதுவும் இரவலாய் தந்துள்ளான் என்பதை ஒருபோதும் மறவாதீர்கள். இந்த உண்மையை அன்றாடம் நினைவு கூர்ந்து வாழ்வீர்களானால் நிச்சயம் மிகவும் பயபக்தியுடன் யாருக்கும் தீங்கிழைக்காது தெய்வ சிந்தனையுடன் வாழ்ந்து மிக அமைதியான வாழ்வை பெறுவீர்கள்.

ஒவ்வொருவருக்கும் வாழ்க்கை அமைப்பு தம்முடை கையிலேயே உள்ளதாக தப்பு கணக்கு போடுகிறார்கள். இது எவ்வளவு அறியாமை, சிலர் தாழ்வு மனப்பான்மையாலும் (Inferiority Complex) வேறு சிலர் உயர்ந்த மனப்பான்மையாலும் (Superiority Complex) இன்னும் சிலர் ஓர் விரக்தி (Frustrate, Monotonous) வெறுப்பான, கசப்பான அர்த்தமற்ற வாழ்க்கையை யாருக்கும் பயனற்ற வாழ்க்கையை வாழவேண்டுமென்று என்னடா வாழ்க்கையிது என்று ஓர் சூன்யமான வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். எது எப்படியாயினும் வாழ்க்கை மிகவும் சூழ்சுமமானது என்பதை யாருமே உணர்வதில்லை. நமக்கு மேலே ஒரு உயர்ந்த சக்தி விஞ்ஞானத்திற்கும் புரியாத அப்பாற்பட்ட ஒரு உன்னத சக்தி இந்த உலகத்தை ஆட்டிப்படைக்கிறது, ஆட்கொண்டுள்ளது, ஆள்கிறது என்பதை யாரும் சரிவர , பிழையற, முடிவுற, விளங்குவதோ, புரிந்து கொள்வதோ இல்லை. இதை அறியாமையென்றோ விதியின் விளையாட்டு என்று கூட எடுக்கலாம். எல்லாமே உலகில் ஓர் விளையாட்டு தான். விதியின் கையில் மனிதன் விளையாட்டுப் பொம்மையே. பூனைக்கு விளையாட்டு எலிக்கு சித்திரவதை என்று சொல்வார்கள். சில சமயங்களில் பூனைக்கு பசி எடுக்காவிட்டால் அந்நேரத்தில் அதன் கையில் ஓர் எலி அகப்பட்டால் அதை உண்ணவும் முடியாது தப்பிபோக விடவும் மனமில்லை. ஆகவே அந்த எலியோடு ஒரு மணிநேரம் விளையாடி வாழுவதை போக்கி விட்டு பசியெடுத்ததும் அதனை கொண்டு பசியாறும். இதேதான் மனித வாழ்வும். மனிதன் இங்கோ பாவம் எலியாகவும் விதி பூனையாகவும் உருவெடுத்துள்ளது. உற்று நோக்கற்பாலது.

(தொடரும்)

**TAMIL INSURANCE CLAIMS CONSULTANT**

**"தமிழில் இலவச ஆலோசனை"**

**வாகன விபத்து அல்லது வீடு விபத்து ஏற்பட்டால் என்ன செய்ய வேண்டும்?**

※ தகுந்த ஆலோசனை ※ சட்ட உரிமைகள்
※ விபத்துக்குள்ளாகியவரின் சம்பள இழப்பீடு
※ உரிய நஷ்டஈடு ※ மற்றைய இழப்பீடு
※ மற்றும் நுணுக்கமான ஆலோசனைகளும், அறிவுரைகளும் தமிழிலும் ஆங்கிலத்திலும் சிறந்தமுறையில் பெற்றுக்கொள்ள

**ரவி நடராஜா** (12 வருட காலம் அனுபவமுள்ளவர்)

தொடர்புகொள்ளுங்கள்: TEL: (416) 245-6555
FAX: (416) 245-7766

2095 Weston Rd., #201 (South of HWY 401), Toronto, Ont. M9N 1X7

நான் ஒரு வழக்கறிஞர் இல்லை.



குழவரவு சட்டம் IMMIGRATION LAW
* அகதி நிலை விண்ணப்பம்
* மேன்முறையீடு
* ஸ்பொன்சர்

குற்றவியல் சட்டம் CRIMINAL LAW
விபத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ACCIDENT VICTIMS

ஆகியவற்றில் அனுபவமுள்ள வழக்கறிஞர்களுடன் மொழிபெயர்ப்பாளராகவும், உதவியாளராகவும் தொழில்புரிகின்றேன்.
உங்களுக்குத் தேவையான சட்டசம்பந்தமான உதவிகளுக்கு



தொடர்பு கொள்ளுங்கள்....> **எஸ்.கே. தீசன் (416) 631-6322**

**IMMIGRATION CONSULTANT**
Christina Staden, M.A.
Member of the Association of Immigration Counsel of Canada
18 years experience
**Free assessment, LOW COST, money back guarantee***
Tel. Toronto (416) 222-5254 Mississauga (905) 501-0307
9AM.-9P.M.




பிரபஞ்சம் 14

# விண்வெளி

தருபவர் - கனி

சென்றதடவை சேர் அல்பிரட் அயன்ஸ்ரைன் பற்றிக் குறிப்பிட்டிருந்தேன். மிகப்பெரிய சிந்தனாவாதியாகிய இவர் பிரபஞ்சத்தின் எந்த அமைப்பையும், இயக்கங்களையும் சூத்திரங்களின் வடிவிலேயே கண்டார்! காட்டினார். இப்பிரபஞ்ச அலுவல்களை இறைவன் மிக நுட்பமாக திட்டமிட்ட அமைப்பிலேயே செய்துள்ளார் என நம்பிய இவர் "கடவுள் தாயக்கட்டைகளை உருட்டி அதன் முடிவுகளின் படி இப்பிரபஞ்சத்தை அமைக்கவில்லை" என்று கூறினார். 1915ம் ஆண்டில் இவர் பொதுச் சார்புக் கொள்கையைக் கூறிய பொழுது அன்று உலகின் மிகச் சிறந்த விஞ்ஞானிகளில் ஒரு சிலருக்கே விளங்கியது என்பார்கள். (அதிலும் சிலர் தமது மேதாவித்தனத்தைக் காட்ட விளங்கியமாதிரி நடித்தார்கள் என்பார்கள். விஞ்ஞானிகளிடையேயும் சுய ஜம்பவான்கள் உண்டு)

பல சிக்கலான சூத்திரங்களின் முடிவுகளுடன் ஆன சார்புக் கொள்கையை விளக்குவது என்பது இயலாத காரியம். ஆயினும் பொதுச் சார்புக் கொள்கையின் சில முடிவுகளைக் கூறுகின்றேன். முதலில் ஈர்ப்பு விசையானது சாதாரண விசைகளைப் போலல்லாது வெளி நேரம் (Space - Time) என்பவற்றைக் கொண்ட சக்தியின் பரிமானமாகக் கருதப்பட்டது; வெளியிலே ஒளியானது பெரிய திணிவுகளின் அருகில் செல்லும் போது வளைவுறும்; (பொதுவாக ஒளி நேர்கோட்டிலே செல்லும் என்பது ஒளிவிதிகளில் ஒன்று) பெரிய திணிவுகளின் அருகே நேரமானது மெதுவாகவும் திணிவுகள் சிறியதான அல்லது திணிவுகள் இல்லாத இடங்களில் நேரம் வேகமாகவும் செல்லும்; (இந்த நேர வேக வித்தியாசம் கணிக்கப்பட்ட முறையாலேயே இன்றைய நாட்களில் செய்மதிகள் மூலம் துல்லியமாக விபரங்களைப் பெறமுடிகிறது; அனுப்பமுடிகிறது) முன்னர் நேரமானது எல்லா இடங்களிலும் ஒரே மாதிரியானது என்று நம்பப்பட்டது.

இப்படியாக ஆரம்ப காலங்களில் கொண்டிருந்த முடிவுகள் எல்லாம் நிபந்தனைகளுக்கு ஏற்ப மாற்றமடையக் கூடியவையாக இருப்பதை பொதுச் சார்புக் கொள்ளை கூறியது. பொதுவாகக் கூறுவதாயின் எந்த ஒன்றுமே எதேச்சையாக அல்லது இன்னொன்றுடன் தொடர்பு அற்றது எனக் கூறமுடியாது என்ற முடிவுக்கு வரலாம். பொதுச் சார்புக் கொள்கையையும் அதன் விளைவுகளையும் விளக்குவதானால் சொல்லிக் கொண்டே போகலாம். தனிமம் என்ற Singularityக்கு அதன் பிரயோகம் பற்றிப் பார்ப்போம்.

ஈர்ப்பு விசையானது Space - Time என்ற சக்தியின் பரிமாணமாகக் கருதப்பட புள்ளி ஒன்றானது நாலு பரிமாணங்களினால் கூறப்பட்டது. சாதாரணமாக புள்ளி ஒன்றின் நிலை மூன்று பரிமாணங்களில் கூறப்பட்டு வந்தது. இப்பொழுது Space Time என்ற புதிய பரிமாணமும் சேர்க்கப்பட்டது.

இந்த Space Time என்ற வெளிநேர பரிமாணத்தில் ஒரு புள்ளியில் திணிவு ஒன்று வைக்கப்படும் போது இப்பரிமாணமானது வளைவுறும். இது எப்படி எனில் ஈர்க்கப்பட்ட ஒரு இரப்பர் பரப்பில் ஒரு பொருளை வைக்கும் போது இரப்பர் பரப்பு சற்று கீழே பதிவது போலாகும். இவ்வளைவின் பருமன் Space Curuature எனும் பதத்தால் அளவிடப்படும் பொருளின் திணிவு, புள்ளியின் சக்தி என்பவற்றிற்கு ஏற்ப இவ்வளைவானது அதிகரிக்கும். இவ்வளைவின் காரணமாகவே சில வான் பொருட்களின் இயக்கங்கள் நியூட்டனின் விதிகட்கு முரணாக காணப்பட்டது என்று அயன்ஸ்ரைன் கூறினார்.

பொதுச் சார்புக் கொள்கையின் முடிவுகள் ஒவ்வொன்றும் எம்மைப் பிரமிக்க வைக்கும். நேரம், திணிவு, புள்ளி ஒன்றின் நிலை, சக்தி, சக்தியின் வெளிப்பாடுகள், சக்தியின் மாற்றம் இவை எல்லாம் எமக்கு புதிய ஏற்றுக் கொள்ளக் கூடிய முடிவுகளைக் காட்டும் எனது நோக்கம் பொதுச் சார்புக் கொள்கையை விளக்குவது அல்ல. பிரபஞ்ச வடிவினை விளங்கிக் கொள்வதே எமது நோக்கம் என்பதால் இதனை இத்துடன் விட்டு விடுகிறேன்.

ஆயினும் எப்பாட்டில் எழுந்த ஒரு ஆதங்கத்தைக் கூறுகின்றேன். ஏனோ தெரியவில்லை இந்த மிகப்பெரிய கண்டுபிடிப்புக்காக அயன்ஸ்ரைனுக்கு நோபல் பரிசு வழங்கப்படவில்லை. புகைபட-மின்-விளைவு தொடர்பான கண்டுபிடிப்பு ஒன்றிற்கே (இதுவும் கூட பிரபஞ்ச அமைப்பை விளக்கப் பயன்பட்டது) அவருக்கு நோபல் பரிசு கொடுக்கப்பட்டது.

-வீணை மைந்தன்

# நான் வாழப் போகிறேன் (சுவடு 16)



"அயராத உழைப்பாலும் திறமையாலும் சோதனைகளைத் தாண்டி ஒருவர் இந்தச் சினிமா உலகில் முன்னணியில் திகழ்கிறார் என்றால் அவர்தான் சிவாஜி கணேசன்" சிவாஜி பற்றிக் குறிப்பிடும் போது_______ இப்படி எழுதுகிறார். அமரர் கவியரசு கண்ணதாசன் அவர்கள்.

தமிழ்த் திரைப்படப் பாடல்கள் மூலம் திரைப்பாடல் சக்கரவர்த்தியாகத் திகழ்ந்தவர் கவியரசு. கவியரசின் பாடலுக்கு மெல்லிசை மன்னர் இசை அமைக்க ரி. எம். எஸ் அவர்கள் குரலிசைக்க நடிகர் திலகம் அவர்கள் அப்பாடலுக்கு உயிர் கொடுத்து நடித்த காட்சிகள் இருக்கின்றதே.... அடடா! எவ்வளவு அருமையான கூட்டமைப்பு!

அந்தக் காலம் தமிழ்த் திரையுலகின் பொற்காலம்! நடிகர் திலகம் பங்கேற்று நடித்த நூற்றுக்கணக்கான திரைப்படங்களுக்குப் பாட்டெழுதியவர் கவியரசு. சிவாஜி அவர்களது அநேகமான படங்களுக்குப் பாட்டு எழுதினாலும் கவியரசும் சிவாஜி அவர்களும் மிக நெருங்கிய நட்புடையவர்களாக இருந்த காலம் மிகக் குறைவு. சில சமயங்களுள் வாய்ச்சண்டை முற்றிக் கைகலக்கும் அளவிற்குப் போன நிகழ்ச்சியும் உண்டு.

ஒரு சமயம் கவியரசு அவர்கள் தன்னுடைய பத்திரிகையில் சிவாஜி அவர்களைக் கிண்டல் செய்து ஒரு கேலிச் சித்திரம் போட்டிருந்தார். கவியரசு அவர்களே அப்படத்திற்கு வசனம் எழுதியிருந்தார். படத்தின் பெயர் தெனாலிராமன். அப்படத்தில் ஒரு காட்சி (சிவாஜியை) தென்னாலிராமனை தலைமட்டும் வெளியே தெரியக் கூடியதாக நிலத்தில் புதைத்திருப்பார்கள். யானையின் கால் கொண்டு தெனாலிராமனின் தலையை நசுக்க வேண்டும். இக்காட்சியையே தனது பத்திரிகையில் படம் போட்டு எழுதி "இது சிவாஜியின் எதிர்காலம் அல்ல" என்று குறிப்பிட்டுக் கேலி செய்திருந்தார்.

கண்ணதாசனிடம் உள்ள குணம் விசத்திரமானது. ஒரு சமயம் தன்னால் புகழப்பட்டவரையே இன்னொரு தடவை இகழ்ந்து பேசுவார், எழுதுவார்!.
சிவாஜி அவர்கள் இச்சம்பவம் குறித்து மனம் வேதனைப்பட்டிருந்தாலும் உள்ளூரக் கவிஞரின் கற்பனையை இரசித்திருப்பார்!
அவருக்குத் தெரியும் கண்ணதாசன் நினைப்பது போல் தன்னுடைய எதிர்காலம் யானையின் காலால் நசுக்கப்படுவது போல் இருக்கப் போவதில்லை என்று. அவ்வளவுக்கு தன்னுடைய திறமையிலும் உழைப்பிலும் அசைக்க முடியாத நம்பிக்கை அவருக்கு. பின்னாளில் கண்ணதாசன் சிவாஜியின் திறமையையும் விடா முயற்சியையும் உணர்ந்து கொண்டபடியால் தான், தான் எழுதிய நூலில் சிவாஜி பற்றிய தனது மதிப்பீட்டைச் சரியாக எழுதியுள்ளார்.

இன்னொரு விடயத்தையும் நாம் இங்கு கவனிக்க வேண்டும். சிவாஜியோடு தன்னால் ஒத்துப் போகமுடியாது என்பதற்காக அவருடைய படங்களுக்குப் பாட்டை எழுத மறுத்ததில்லை கவியரசு. அதேபோன்று "என்னுடைய படங்களுக்குக் கண்ணதாசன் பாட்டெழுதக் கூடாது" என்று சிவாஜி அவர்கள் தன்னை வைத்துப் படம் எடுப்பவர்களிடம் தடையுத்தரவு போட்டதும் கிடையாது.

சிவாஜியுடன் நெருக்கம் இல்லாத காலங்களில் கவியரசு அவர்கள் எம்.ஜி.ஆரிடத்து மிகவும் நெருக்கமாகவும், அவருடைய படங்களுக்கு கதைவசனம் பாடல் எழுதுபவராகவும் விளங்கினார் என்பது கவனிக்கத்தக்கது. தொழில் ரீதியில் சிவாஜி - எம். ஜி. ஆர் - என்ற இரு துருவங்களுக்கிடையே பலத்த போட்டியிருந்த இக் காலத்திலேயே அதிகமான சிவாஜி படங்களுக்குக் கண்ணதாசன் பாட்டெழுதினார் என்பதையும் நாம் நன்கு கவனிக்க வேண்டும்.

சிவாஜி அவர்களிடத்துள்ள மிக அற்புதமான குணங்களுள் ஒன்று தனக்கு வேண்டாத யாரையும் பழி தீர்ப்பதோ வஞ்சிப்பதோ கிடையாது. "இவர் எனக்கு வேண்டாதவர் இவரை இப்படத்திலிருந்து தூக்கிவிடு" என்றோ. "இந்தக் கதாநாயகியை நீக்கிவிட்டு அந்தம்மாவைப் போடு" என்றோ சம்பந்தப்பட்டவர்களிடம் தலையிடுவதில்லை. எதிரியாக இருந்தாலும் கொடுக்கப்பட்ட பாத்திரத்தின் குணசித்திரத்திற்கேற்றாப்போல் மனம் விட்டு நடித்து தான் சம்பந்தப்பட்ட காட்சியைப் பிரமாதப்படுத்திவிடுவார். உதாரணமாக "உயர்ந்த மனிதன்" படத்தில் அசோகனுடன் நட்பாக நடித்திருந்த வேளை இருவருக்கும் ஆரோக்கியமான உறவு இருந்ததில்லை. அதற்காகத் தயாரிப்பாளரின் விருப்பத்திற்கு முட்டுக்கட்டை போடமாட்டார். இப்படியான சூழல்களில் அவரைத் தொழிலில் வெற்றி காண வைப்பது அவரிடத்துள்ள தொழில் திறமையும் - பக்தியும்-தன்னம்பிக்கையுமேயாகும். விருப்பு வெறுப்புக்களைத் தொழிலில் திணிக்கமாட்டார். தாழ்ப்புணர்வு அவரைக் கட்டிப் போட மாட்டாது. கண்ணதாசன் என்னுடைய படங்களுக்குப் பாட்டு எழுதக் கூடாது என்று சிவாஜி சொல்லாவிட்டாலும் தயரரிப்பாளர்கள் சூழ்நிலை அறிந்து கவிஞரை அணுகுவதில்லை. இச் சூழலில் கவிஞருக்குப் பல படங்கள் கைநழுவிப் போயின. "பாகப்பிரிவினை" படப் பாடல்கள் வெற்றி பெற்ற பிறகு இந்நிலைமை மாறிப்போயிற்று.

சிவாஜியை வைத்தப் படம் எடுத்த தயரரிப்பாளர்கள் அனைவரும் கவியரசை நாடினார்கள். "பாசமலர்" படத்தில் இடம்பெற்ற 'மலர்ந்தும் மலராத' என்ற பாடலில் வரும்.... "நதியில் விளையாடி கொடியில் தலைசீவி நடந்த இளம் தென்றலே...! என்ற அடிகளால் கவரப்பட்ட நடிகர் திலகம் பழசையெல்லாம் மறந்து "கவிஞர்! நீ தாண்டா பிறவிக் கவிஞன்: என்று உற்சாகத்தோடு கவிஞரைக் கட்டித் தழுவிக்கொண்டார். அது மட்டுமல்ல; அன்று இரவே பெரிய விருந்து ஒன்றையும் கவிஞருக்கு அளித்தார்.

இருவருக்கும் இருந்த கருத்து வேற்றுமை அந்த இரவில் ஒழிந்தது. புதிய பொழுது மலர்ந்தது. பாமலர், பாலும் பழமும், பார்த்தால் பசிதீரும், படித்தால் மட்டும் போதுமா முதலிய 'ப' வரிசைப் படங்களில் எல்லாம் தன் கவித்துவத்தை மடைதிறந்த வெள்ளமென அள்ளி வீசினார்!
அதை அவரது உதவியாளர் எழுதிக் குவித்தார். படத்தில் 'பாடல்கள் கவியரசு கண்ணதாசன் என்று திரையில் எழுதிக்காட்டும் போது அரங்கே அதிரும் அளவிற்கு இரசிகங்கள் கரவொலி எழுப்பத் தொடங்கினார்கள். நடிப்பிற்குக் கைதட்டல் கேட்டதுண்டு; வசனத்திற்குக் கேட்டதுண்டு. ஆனால் திரை உலக வரலாற்றில் பாடலாசிரியர் பெயருக்குக் கைதட்டல் பெற்றவர் கவியரசு ஒருவரேயாகும்! இதை ஏன் இங்கு குறிப்பிடுகிறேன் என்றால் சமீபத்தில் நடிகர் திலகம் அவர்களுக்குச் சிங்கப்பூர் நாட்டு தமிழ் இரசிகர்கள் மாபெரும் பாராட்டு விழா ஒன்றை நடத்தியிருந்தார்கள்.

அவ்விழாவில் பங்கேற்றிச் சிறப்புரை வழங்கிய கவிஞர் வைரமுத்து அவர்களை சிவாஜி அவர்கள் பாராட்டும் போது "கண்ணதாசனை வைரமுத்து ஜெயித்துவிட்டார்" என்று புகழ்ந்து பேசிய பாராட்டுரை பலத்த சர்ச்சையைக் கிளப்பி விட்டது. சிவாஜி அவர்களது பாராட்டுரையில் தவறொன்றுமில்லை. அதை உணர்ச்சி வயப்பட்டு விமர்சனம் செய்தவர்கள் தான் குளப்பி விட்டார்கள். இந்த இலக்கியச் சர்ச்சைக்கு விளக்கம் தந்து கவியரசினதும் கவிஞர் வைரமுத்து அவர்களினதும் திறமையைச் சமன் செய்து சிவாஜி அவர்களது பாராட்டுரை நியாயமானதே என்று விளக்கவுரை வழங்கிய முத்தமிழ் அறிஞர், கலைஞர், மு..க அவர்களது பதிலைத் தருகிறேன்.

- சுவடுகள் தொடரும்.....




மக்களின் பேராதரவைப் பெற்ற
செந்தியின்
தமிழன் வழிகாட்டி
வர்த்தக, தகவல் களஞ்சியம்
சேவை
தரம்
இலவசம்
1999ம் ஆண்டுக்கான விளம்பரத்துக்கு முந்துங்கள்
Tel: (416) 438-9797 Fax:(416)438-6663

# விளையாட்டுத் தகவல்கள் (14)

எஸ். கணேஷ்

## முரளீதரனின் பந்து வீச்சால் இலங்கை அணிக்கு மீண்டும் வெற்றி



சென்ற இதழ் பத்திரிகையில் தமிழ் வீரன் முரளீதரனின் பந்து வீச்சால் இலங்கை கிரிகெட் அணி Triangular Tournament இல் இங்கிலாந்து அணியை வெற்றி ஈட்டியது. இதில் முரளீதரன் Man of the Match விருதும் பெற்றார். கடந்த வாரம் இங்கிலாந்து அணிக்கும் இலங்கை அணிக்கும் இடையே நடைபெற்ற Test Match போட்டியில் மீண்டும் இரண்டு இனிங்சிலும் 16 விக்கெட்டுகளை வீழ்த்தி (முதல் Innings - 7 விக்கெட்டுக்கள் , இரண்டாவது Innings -9 விக்கெட்டுக்கள்) சாதனை படைத்துள்ளார்.

இதுவே இலங்கை அணி சார்ப்பில் Test போட்டியில் இலங்கை வீரர் ஆகக் கூடிய சாதனை பந்து வீச்சில் ஆகும். இது மட்டும் அல்ல உலகிலேயே 1991ம் ஆண்டின் பின்பு 5வது Best Bowling Figures in Test Match.

ஆவணி 27ம் திகதி தொடங்கிய 5 நாள் Test Math இல் இலங்கை அணி மிகவும் விறுவிறுப்பாக விளையாடி நான்காவது நாள் ஆட்டம் வெற்றி தோல்வி இன்றி முடிவடையும் நிலையில் இருந்தது. ஆனால் முரளீதரனின் அபார பந்து வீச்சினால் திக்கு முக்காடிய இங்கிலாந்து அணி 2வது Innings இல் 181 ஓட்டங்களை மட்டும் பெற்று சகல விக்கெட்டுகளையும் இழந்தது. இதில் முரளீதரன் 10 விக்கெட்டுகளில் 9 விக்கெட்டுகளை கைபைற்றினார். மற்றைய ஒரு விக்கெட் Runout ஆகும். இங்கிலாந்து மண்ணில் இலங்கை அணி வெற்றி பெற்றது இதுவே முதல் தடவையாகும். இதில் Man of the Match விருது மீண்டும் முரளீதரனுக்கே வழங்கப்பட்டது.



| England | 1st Innings | | Runs | 2nd Innings | Runs |
|---|---|---|---|---|---|
| Butcher | (C) Jayasuriya | (B) Wickrmasinge | 10 | (B)Muralitharan | 15 |
| James | | (C+B) Muralitharan | 36 | (B) Muralitharan | 25 |
| Hick | (C) Kaluwttrna | (B)Wickramas | 107 | Runout | 1 |
| Stewart | (C) Tillakarnine | (B) Perera | 2 | (B) Muralitharan | 0 |
| Ramprakash | (C) Jayawardene | (B) Muralitharan | 53 | (B)Muralilitharan | 42 |
| Crawly | Not out | | 156 | (B) Muralitharan | 14 |
| Holling | (C) Atapattu | (B)Muralithran | 14 | (B) Muralitharan | 0 |
| Gork | | (B) Muralitharan | 6 | (B) Muralitharan | 8 |
| Salisbury | | (B)Muralitharan | 2 | (B)Muralitharan | 0 |
| Gougi | | (B)Muralitharan | 4 | (B) Muralitharan | 1 |
| Fraser | | (B) Muralitharan | 32 | Notout | 0 |
| | (Allout 158.3 Overs) | | 445 | (Allout 129.2 Overs) | 181 |

| SriLanka 1st Innings | Runs | 2nd Innings | Runs |
|---|---|---|---|
| Jayasuriya | 213 | Notout | 24 |
| Attapattu | 15 | Notout | 9 |
| Jayawardene | 9 | Extras | 4 |
| Aravin D Silva | 152 | | |
| Ranatuhga | 51 | | |
| Tillakaratne | 0 | | |
| Kaluwithrna | 25 | | |
| Dharmasena | 13 | | |
| Pereza | 43 | | |
| Wickramasinge | 0 | | |
| Muralitharan | 30 | | |
| (Allout 156.5 Overs) | 591 | (5 Overs) | 37 |

| | | O | M | R | W |
|---|---|---|---|---|---|
| Muraletharan | 1st Innings | 18 | 3 | 55 | 7 |
| | 2nd Innings | 54 | 27 | 65 | 9 |

இலங்கை அணி 10 விக்கெட்டுக்களைப் பெற்று வெற்றி ஈட்டியது. Man of the Match விருது முரளிதரனுக்கு வழங்கப்பட்டது.

தற்போது மலேசியாவில் Commonwealth கிரிக்கெட் போட்டிகள் நடைபெறுவது யாவரும் அறிந்ததே. கனடா அணியும் இப்போட்டிகளில் பங்குபெற்றுகிறது. கனடா அணி சார்பாக மூன்று தமிழ் வீரர்கள் விளையாடுகிறார்கள். Toronto Centuriens அணியை சேர்ந்த இவ் தமிழ் வீரர்கள் விளையாடுவது எம்மவர் யாவருக்கும் பெருமையே. ஆனால் கனடாவின் கஷ்ட காலம் கனடா அணியின் Group இல் அவுஸ்ரேலியாவும், இந்தியாவும் விளையாடுகின்றன.

செப்ரெம்பர் 9ம் திகதி கனடா அணிக்கும் அவுஸ்ரேலியா அணிக்கும் நடைபெற்ற போட்டியில் அவுஸ்ரேலியா அணி 9 விக்கெட்டுகளால் வெற்றி பெற்றது. இதில் ஒரே ஒரு விக்கெட்டே கனடா அணி வீழ்த்தியது. அந்த விக்கெட் ரொரன்ரோ தமிழ் வீரர் சஞ்யே துரைசிங்கம் என்பவரால் வீழ்த்தப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

செப்ரெம்பர் 12ம் திகதி கனடா அணிக்கும் இந்திய அணிக்கும் நடைபெற்ற போட்டியில் இந்திய அணி 112 ஓட்டங்களால் வெற்றி பெற்றது. Commonwealth போட்டிகளில் தற்போது ஸ்ரீலங்கா, அவுஸ்ரேலியா, இந்தியா, பாகிஸ்தான் ஆகிய அணிகள் முன்னணி வகிக்கின்றன. இறுதிப்போட்டி செப்ரெம்பர் 19ம் திகதி நடைபெறும்.


**பூச்சிகளை நீக்கமுடியுமா?**

நீண்ட ஆண்டுகள் பரிசீலித்த, பூச்சிகளை முற்றாக அழித்த புதிய முறையினால் உங்கள் வீடுகளில் / வியாபார நிலையங்களில் உள்ள பூச்சிகளையும், எலிகளையும் முற்றாக நீக்கிட இன்றே தொடர்புகொள்ளுங்கள் -

காந்தன் ☎ :(416) 283-9538

**வீட்டுப் பரிசோதனை HOME INSPECTION**

நீங்கள் வாங்கும் வீட்டில் காணப்படும் பிழைகளை வீடு வாங்கும் பொழுது சிறந்த முறையில் சிறந்த பரிசோதகரால் பரிசீலிப்பதற்கு அழையுங்கள் நந்தீஸ் வேலுப்பிள்ளை

**NANTHEE & SONS**
**DESIGN & INSPECTION**

Nanthee Veluppillai P. Eng., C.B.C.O
(Home Inspector)
Inspection within 48 hrs, 7 days a week

- Home Inspection
- Design & Services
- Consulting Services
- Basement APT
- Addition & Alteration
- Renovation

41 Longbow Square, Scarborough, Ont. M1W 2W6
Tel.: (416) 496-9595 Fax: (416) 496-9595

தமிழ்நாடு நீலாங்கரை சித்தயோகி ஸ்ரீசிவசங்கர் பாபா அவர்களின்
பூரணநல்லாசிகளுடன்

# மகாராஜாஸ்
# (F)பன்ஸி பலஸ்

# கோலாகலமான திறப்பு விழா



**12-09-98**
**சனிக்கிழமை**

